**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 16/2022**
**நாள்.20.07.2026**
**வா.சா.1- சின்னக்காளைதேவர்**
**த/பெ - பெரியகருப்புத்தேவர்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் விவசாயம் செய்து வருகிறேன். வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேனா என்றால் சரிதான். வருமான வரி செலுத்திவருகிறேனா என்றால் இல்லை.

2. பிரதிவாதி மின்சாரதுறையில் கணக்கெடுப்பாளராக பணியாற்றி வருகிறார். பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் என்னுடைய உறவினர்கள் மூலமாக சுமார் 4,5 வருடங்களாக அவரை தெரியும். பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டார். பிரதிவாதி எவ்வளவு மாதசம்பளம் பெறுகிறார் என்றால் மாதம் ரூ.40,000/- - 50,000/- வரை பெறுவார். பிரதிவாதி என்னிடம் கடன் பெறவேண்டிய அவசியம் இல்லை என்றால் அவருடைய கணவர் உடல்நலமின்றி இருக்கும்போது சிகிச்சைக்காக வாங்கினார்.

3. நான் வடுகபட்டியில் எனது வீட்டில் வைத்து பிரதிவாதிக்கு பணத்தை கொடுத்தேன். அப்போது பழனிச்சாமி, சௌகத்அலி மற்றும் என்னுடைய மனைவி ஆகியோர் உடன் இருந்தனர்.

4. புரோநோட்டில் பிரதிவாதி கைரேகை மற்றும் கையொப்பம் இட்டார். புரோநோட்டில் யார் சாட்சி கையொப்பம் போட்டது என்றால் சௌகத்அலி போட்டார். சௌகத்அலியை எனக்கு சிறு வயதில் இருந்தே தெரியும். சௌகத்அலியை நான் தான் அழைத்து வந்தேன் என்றால் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் சாட்சி கையொப்பம் இட நான் தான் அழைத்து வந்தேன்.

5. புரோநோட்டை பழனிச்சாமி எழுதினார். அவரை எனக்கு சிறுவயதில் இருந்தே தெரியும். அவரை நான் தான் அழைத்து வந்தேன் என்றால் அவர் அந்த தொழில் செய்து வருவதால் அவரை அழைத்து வந்தேன். மேற்படி புரோநோட்டை கான்கிரீட் பேப்பரில் கைப்பட எழுதப்பட்டது.

6. புரோநோட்டில் எவ்வளவு நாள் கழித்து பிரதிவாதியிடம் கையெழுத்து வாங்கினேன் என்றால் புரோநோட்டில் கையொப்பம் பெற்றுக்கொண்டு தான் பணம் கொடுத்தேன்.

7. பிரதிவாதியிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டபின்பு புரோநோட்டை நிரப்பினேன் என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும், வாங்கவேண்டிய தேவை இல்லை என்றாலும் சரியல்ல.

8. பிரதிவாதி எனக்கு புரோநோட் கொடுக்கவும் இல்லை என்றாலும், அதிலுள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றாலும் சரியல்ல.

9. பிரதிவாதி எதிர்வழக்குரையில் புரோநோட்டில் உள்ள கையெழுத்து தன்னுடைய கையெழுத்து என்று கூறியுள்ள விவரத்தை நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான்.

10. புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்பதை நிரூபிப்பதற்கு கையெழுத்து நிபுணரின் கருத்துரைக்காக நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

11. பிரதிவாதியை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புரோநோட்டை உற்பத்தி செய்ததால் தான் உரிய விபரங்கள் இன்றி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகையால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**